இனிமேலாகிலும் நிதி ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்தப் பாலத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து பதில் அளிக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலைக்கான பணிகள் துவக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அது எப்போது முடிவுறும், இப்போது எந்த அளவுக்கு வேலைகள் முடிந்து இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பாதை அமைப்பு முறை இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பாலங்கள் சில கட்டப்படுவதற்குத்தான் மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். பாதை அமைப்பு முறை—அதாவது அலைன்மெண்ட் ஆப் தி ரோட்—இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மத்திய அரசிடம் அதை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

### தாராட்சி கிராமத்திற்கருகே பாலம்

*11 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாராட்சி கிராமத்தருகில் பொதுப் பணித் துறைக் கால்வாயின் மேல் அமையும் சிறு பாலத்தைக் கட்டி முடிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருவள்ளூர் வட்டம் தாராட்சி கிராமத்தில் சுரட்டப்பள்ளி வரவு கால்வாயின் குறுக்கே ஒரு நடைப்பாலம் கட்ட ரூ. 27,700-க்கு பொதுப் பணித் துறை அரசு ஆணை எண். 3736, நாள் 15—12—73-ல் ஒப்பதல் அளிக்கப் பட்டு இவ்வேலைக்கான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்கொண்டு வேலையைத் துவக்குவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1974 ஆகஸ்ட் 12]

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. மழை காலம் நெருங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு பக்கத்திலுள்ள மக்கள் மறு பக்கத்திற்குப் போவதற்கு உதவிகரமாக இருக்கும் வகையில், அந்தப் பாலத்தை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்காரர்களிடம் வேலையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு.**

*12 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் தற்போது எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சேலம் உருக்காலையை அமைக்கும் கம்பெனியான "சேலம் ஸ்டீல் லிமிடெட்" என்னும் நிறுவனத்தில் தற்போது 100 பேர் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளார்கள் என்றும், "ஹிந்துஸ்தான் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட்" என்னும் நிறுவனத்தின் கீழ் சுமார் 6,592 பேர் வேலை செய்வதாகத் தகவல் வந்துள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சேலம் உருக்காலைத் திட்டம் எப்போது வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. முடிகின்ற நேரத்தில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்பிருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வருங்காலத்தில் முதல் பகுதியாக (பேஸ்-ஒன்) 1,561 பேர்களுக்கு வேலை கிடைக்கலாம் என்று தகவல் தந்து இருக்கிறார்கள். முடிப்பது மத்திய அரசின் கையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இதிலும் வேலைக்கு அமர்த்துவதில் 80 சதவிகிதம் அந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக, இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக